**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.287/2022**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பவுனம்மாள் | Caste | : |
| Father Name/ Husband Name | : பால்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(05.08.2025)**
**முதல் விசாரணை**

நான் சிந்துபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இரண்டு பேரையும் எனக்கு தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகள் வீட்டின் நெல்லை எனது வீட்டின் முன்பு வைத்து தூத்திக்கொண்டிருந்தார்கள். அதிலிருந்து வந்த தூசி எனது கண்ணில் பட்டுவிட்டது. நான் எதிரிகளிடம் இவ்வாறு செய்யாதீர்கள் என சொல்லிவிட்டு எனது வீட்டிற்குள் சென்று தூங்கிவிட்டேன். மீண்டும் அதே நாள் மாலை 3.45 மணியளவில் நான் வெளியே வந்து பார்த்த போது மேற்படி தூசியானது எனது இரண்டு கண்ணிலும் பட்டது. ஆஜர் எதிரி பாண்டியம்மாள் என்னை தேவிடியா அவுசாரி என அசிங்கமாக பேசி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார். அஜர் எதிரி பாண்டி அரிவாளால் அவள் புருஷனை கொன்ற போல் அவளையும் கொன்று விடவேண்டும் என சொல்லி என்னை பார்த்து மிரட்டி அரிவாளால் எனது வலது முழங்காலுக்கு கீழே வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். சம்பவத்தை எனது மகள் பாண்டீஸ்வரிக்கு போன் செய்து போன் மூலம் சொல்லி வரச்சொன்னேன். எங்கள் ஊரைச் சார்ந்த சிவராமனும் காத்தம்மாளும் என்னை எங்கள் ஊர் மெயின் ரோடு வரை அழைத்து சென்றார்கள். அப்போது எனது மகள் திருமங்கலத்திலிருந்து

வந்துவிட்டார். காவல் நிலையம் அங்கு தான் உள்ளது. சம்பவம் பற்றி எனது மகள் பாண்டீஸ்வரி புகார் எழுதினார். புகாரில் உள்ள இடது கைவிரல் ரேகை நான் வைத்தது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தேன். அங்கு சுமார் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1வது எதிரியின் தகப்பனாரும் எனது தகப்பனாரும் உடன் பிறந்தவர்கள் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் இறந்து 50 வருடங்கள் ஆகிறது. அப்போது 1வது எதிரிக்கு வயது 7, 8 இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு காது கேட்கும் கருவி உள்ளதால் சிறிது கேட்கும். **சாட்சியின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**